# ஸ்ரீ ராஜாராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது

காரைக்குடி மார்ச் 27

ஸ்ரீ ராஜாராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டிட பொறியியல் துறை சார்பாக தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் **தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் தொழில்நுட்பம்** என்ற தலைப்பில் பல்வேறு கல்லூரியை சேர்ந்த மாணவ, மாணவிகள் ,மற்றும் கல்லூரி விரிவுரையாளர்கள் ,**ஆராய்ச்சி** அறிஞர்கள் கலந்து கொண்டனர். விழாவில் அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தருமான **முனைவர் S . சுப்பையா** அவர்கள் தலைமை ஏற்று தலைமையுரையாற்றினார் .

இவ்விழாவில் கல்லூரி முதல்வர் **முனைவர் A .இளங்கோ** அவர்கள் வரவேற்புரையாற்றினார் .மேலும் இவ்விழாவில் காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் **முனைவர் M .முத்துக்குமார்** சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் ,மற்றொரு சிறப்பு விருந்தினராக அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டிட பொறியியல் துறையின் தலைவர் **முனைவர் C சிவனேசன்** கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.முனைவர் C.R.பரமசிவம் அவர்கள் ப்ளு ஹோரா பல்கலைக்கழகம் ,எத்தியோப்பியாவிலிருந்து காணொளி மாநாடு வழியாக மாணவர்களுக்கு **தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் தொழில்நுட்பம்** பற்றி எடுத்துரைத்தார். இவ்விழாவில் கட்டிட பொறியியல் துறையின் **நினைவு புத்தகம்** வெளியிடப்பட்டது .விழாவில் துணை முதல்வர் V .**மகாலிங்க சுரேஷ்** கல்லூரி ஒருங்கிணைப்பாளர் M .**வடிவாம்பாள்** , மற்றும் பல துறை சார்ந்த பேராசியர்களும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.முடிவில் ஸ்ரீ ராஜாராஜன் பொறியியல் மற்றும்

தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டிட பொறியியல் துறையின் தலைவர் s .**திவ்யா** நன்றியுரையாற்றினார்.